**27.06.2025**

**அ.வ.எண். 119/2021**

**வா.சா.1 - மணிசேகர், த/பெ. வெங்கடாசலம்**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 27.06.2025 is accordance with the provision of Act X of 3331

**1,ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

1. எனது பூமிக்கு தெற்கே 1, 2 பிரதிவாதிகள் பூமி உள்ளது. அதற்கு தெற்கே ஏரிக்கரை உள்ளது. ஏரிக்கரை உயரம் சுமார் 20 அடி இருக்குமா என்றால் சற்று குறைவாக இருக்கும். ஏரியின் உயரம் 20 அடி என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தெற்கே உள்ள கிணற்றில் இருந்து பைப் லைன் வழியாக தண்ணீர் செல்கிறது என்றால் சரிதான், தற்போது செல்கிறது, அதற்கு முன்பாக வாய்க்காலில் உள்ள பூமிக்குள் புதைக்கப்பட்ட பைப் லைன் வழியாக தண்ணீர் சென்றது.

2. தென்புறம் உள்ள கிணற்றில் இருந்து வடபுறம் உள்ள கிணறு வரை 2 ½ அடி கான்கிரீட் மேடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை, நடைபாதை தடம் உள்ளது. நடை பாதை தடத்தை ஒட்டி 2 ம் பிரதிவாதியின் பூமி உள்ளது. தாவா சொத்தின் கிழக்கே உள்ள பூமி யாருக்கு பாத்தியம் என்றால் என் தகப்பானருக்கு 1978 ல் கிரயம் மூல் பாத்தியப்பட்டது. என் தகப்பனார் இறந்துவிட்டார், தற்போது அந்த பூமி எனக்கும், என் சகோதரிக்கும் பாத்தியப்பட்டது. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள 25 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது.

3. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள பூமியை ஒட்டி நடைபாதை செல்கிறது என்றால் இல்லை, சாட்சி மீண்டும் சரிதான் என்று சாட்சியம் அளிக்கிறார். தாவா சொத்துக்கும், கிழக்கே உள்ள எங்களது பூமிக்கும் இடையே பொழி இல்லை என்றால் தற்போது இல்லை, என் தகப்பனார் கிரயம் பெற்றபோது இருந்தது. அப்போது வேறு வேறு உரிமையாளார்கள் இருந்ததால் பொழி இருந்தது, தற்போது சொத்து எங்களுக்கு சொந்தமாக உள்ளதால் பொழி இல்லை.

4. தாவா சொத்தை ஒட்டி கிழபுறத்தில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட 48 சென்ட் பூமிக்கு தெற்கே ஒரு வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். அந்த வாய்க்கால்

வழியாக தான் 1ம் பிரதிவாதிக்கு பைப் லைன் அமைப்பதற்கு முன்பாக தண்ணீர் சென்றது என்றால் இல்லை. 2020 ல் தான் பைப் லைன் போட்டனர், அதற்கு முன்பாக பூமிக்கடியில் உள்ள பைப் லைன் மூலமாக தண்ணீர் சென்றது. அவ்வாறு பைப் லைன் செல்லவில்லை என்றும், 1948 ம் ஆண்டில் இருந்து வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் சென்றது என்றால் வாய்க்கால் வழியாக தான் ஜோசப் நிலத்திற்கும், வெங்கடேஷ் நிலத்திற்கும் பூமிக்கடியில் உள்ள பைப் லைன் வழியாக வந்து வாய்க்காலின் வழியாக எங்களது நிலத்திற்கு தண்ணீர் சென்றது, 1956 ம் ஆண்டில் இருந்து சுமார் 70 வருடங்களாக இவ்வாறு தான் தண்ணீர் செல்கிறது.

5. தற்போது பூமிக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறோம். நொய்யல் ஆற்றின் வழியாக வந்து பொருட்களை எடுத்து சென்று கொண்டிருந்தோம் என்றும், பாலம் கட்டியதால் அந்த வழியாக வர முடியவில்லை என்றால் பாலம் எதுவும் இல்லை, நொய்யல் ஆற்றின் அருகே எந்த வழி மற்றும் போக்குவரத்து இல்லை. பிரபு தோட்டத்தின் வழியாக வண்டி வருகிறது என்றால் தற்காலிகமாக அவரிடம் அனுமதி பெற்று வண்டி வருகிறது. தாவா சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள நிலம் மற்றும் பிரதிவாதிகளின்நிலத்திற்கு செல்ல வாகனங்கள் செல்ல வழி இல்லை என்றும் நடைபாதை மட்டும் தான் எப்போதும் உள்ளது என்றால் சரியல்ல, வழக்கு சொத்தின் வழியாக தான் கனரக வாகனங்கள், டிராக்டர்கள் வந்து செல்கிறது.

6. என் பூமியை ஒட்டி தான் தென்வடல் பாதை உள்ளது என்றும், என் சொத்திற்கு கிழமேல் வாய்க்காலை அழித்து விட்டு விட்டு தற்போத பாதை இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, எங்கள் நிலத்திற்கும், ஜோசப் நிலத்திற்கும், வெங்கடேஷ் நிலத்திற்கும் இடையே பாதை உள்ளது. எங்கள் நிலத்திற்கும், ஜோசப் நிலத்திற்கும், வெங்கடேஷ் நிலத்திற்கும் இடையே பாதை உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில், எழுதிகொடுத்தவர் எங்களது பங்கு பூமிக்கும் வடக்கே எஸ்.எஸ்.வெங்கடராம ஐயர் பூமிக்கும் கிழக்கு, பேச்சியண்ணதேவர் பங்கு பூமிக்கும் தெற்கும்-மேற்கும், இதன் மத்தியில் பண்ணை படுமரம், வாரி வாய்ககாலும், மாமூல் தடப்பாத்தியமும் சகிதம் என குறிப்பிட்டு எழுதியுள்ளார். அவ்வாறு தடம் இல்லை என்றும், அதன் காரணமாக தான் எந்த ஆவணத்திலும் தடம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

7. பிரதிவாதிகளின் பூமி பட்டா பூமி என்றும், அதற்கு நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. 2012 ம் ஆண்டில் பிரதிவாதிகள் பூமியை வாங்கும்போதே நிலம் முழுக்க வாழை பயிரிடப்பட்டிருந்தது என்றால் பெரும்பாலான நிலம் காலி நிலமாக தான் இருந்தது. வா.சா.ஆ.11 புகைப்படம் எடுக்கும்போது, வேலி போடப்பட்டிருந்தது என்றும், கட்டிட வேலை நடைபெறும்போது ஆழ்துளை கிணறு தோண்டும்போதும், மூலப்பொருட்கள் கொண்டு வருவதற்காகவும், மண் கொட்டினார் என்றும், அப்போது மரக்கிளை தடுத்ததாலும், எந்த வாகனம் சென்றாலும் 10 அடி உயரத்திலுள்ள மின்சார கம்பி உரசுவதாலும் சரிவு அதிகமாக இருந்ததாலும், ஆழமான தென்புற கிணறு அருகில் இருந்த காரணத்தாலும் அந்த வழியை உபயோகப்படுத்த முடியாததால் அந்த மேடையை அவர் பழைய படி மாற்றிவிட்டார் என்றும், அதை சாதகமாக கொண்டு நான் வழி உரிமை கோருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை, 1956 ம் ஆண்டில் இருந்து ஏரி வழியாக தான் பொருட்களை எல்லாம் எடுத்து செல்கிறோம், அதன் வழியாக தான் டிராக்டர் மற்றும் வண்டி வாகனங்கள் சென்று வருகிறது.

8. எங்கள் காட்டினுள் எந்த வழியும் இல்லை. வடபுறம் உள்ளவர்கள் மட்டும் 2 ½ அடி பாதையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாதை இல்லை என்றும், இருந்த பாதையை அழித்துவிட்டு பிரதிவாதிகளின் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கும் தாக்கல் செய்யும்போது பாதையும், வாய்க்காலும், ஏரிக்கரையும் இருந்தது, நீதிமன்ற ஆணையர் வருவதற்குள் அனைத்தும் அழிக்கப்பட்டு பைப் லைன் உடைக்கப்பட்டது. ஏரிக்கரையில் இருந்து சரிவில் வரும் பாதை தென்புற கிணற்றுடன் அந்த 2 ½ அடி பாதையுடன் இணைக்கப்படுகிறது என்றால் அவ்வாறு இல்லை. நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முன் பாதை இணைக்கப்பட்டது.

9. எனது தோட்டத்திற்கு வடபுறம் உள்ளவர்கள் தென்னந்தோப்பு வைத்துள்ளார்கள், மேற்படி வடபுறம் உள்ளவர்களும் தேங்காய் விற்பனை செய்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி வீடு கட்டும்போது, அதற்குண்டான போர் வண்டியும், பொருட்களும் பிரபு பூமியின் வழியாக தான் ஜோசப் பூமிக்கு வந்து, வெங்கடேஷ் பூமிக்கு வந்தது என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் கனரக வாகனங்கள் ஏரி வழியாகத்தான் வருகிறது என்று சாட்சியம் அளிக்கிறார். நான் சொல்வது போல் வழி இருக்கும் பட்சத்தில் பிரபுவிடம் கேட்டு வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பேச்சியண்ண தேவர் வாங்கிய ஆவணத்திலேயே கிழமேல் வாய்க்கால் தான்

குறிப்பிடபபட்டுள்ளது என்றும், அதை தாண்டி அவருக்கு இல்லாத உரிமையை அவர் விற்பனை செய்ய முடியாது என்றால் நாங்கள் சங்கரம்மாளிடம் இருந்து கிரயம் பெற்றோம். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரண இல்லை.**

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

SD.M.Santhosham
District Munsif, Sulur